**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.271/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | ராமசாமி(PW2) | | |
| Father's Name | சின்னசாமி | தொழில் | |
| Village | கருவலூர் | | |
| Taluk | அவிநாசி | Age | **55** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th **day of July 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 11 மணி அளவில் சாப்பிடுவதற்காக கடை தேடிக்கொண்டே அனந்தகிரி அருகே வந்தேன். அரசு பேருந்தில் ஒரு நபர் அடிபட்டு விட்டதாக சொல்லி கூட்டமாக இருந்தது. நான் அருகில் போய் பார்த்தபோது அடிபட்ட ஒரு நபரை ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு இருந்தார்கள். அங்கு போலீசார் இருந்தார்கள். அந்த இடத்தில் வைத்து என் பெயர் முகவரியை போலீசார் வாங்கிக் கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அனந்தகிரிக்கும் கருவலூருக்கும் சுமார் இரண்டு மூன்று கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். இறந்து போன நபர் எனக்கு யார் என்று தெரியாது. சம்பவ இடத்தில் அடிபட்ட நபரை ஆம்புலன்ஸில் ஏற்றிய போது தான் எனக்கு விபத்து நடந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |